**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No.178/2024**
**U/s. 294(b),506(1) IPC, 4TNPCEI Act**
**PROSECUTION WITNESS NO. 5 (LW.3 )**

| | |
|---|---|
| **Name** : கோவிந்தராஜ் | |
| **Father's/Husband Name :** | **Occupation** : |
| **Address** : | **Age** : /2026 |

**1** வது எதிரி ஆஜர்**. 2** வது எதிரி ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, செளந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.178/2024 02.07.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.09**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தஞ்சாவூர் கீழ வெள்ளளார் தெருவில் குடியிருந்து அரிசி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் 1 வது எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கின் 2 வது எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மேற்கு காவல் நிலைய திருமதி. சுகிதா அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கின் அசா 1 சுரேஷ்பாபு எனது நண்பர் ஆவார். கடந்த ஆகஸ்ட் மாதம் 2022 ம் வருடம் அவரது குடும்ப சூழ்நிலை காரணமாக கலைவாணி பெயரில் உள்ள திருமலைசமுத்திரத்திலுள்ள காலிமனையின் அசல் ஆவணத்தை அசா1 அவருக்கு பழக்கமான கணேசிடம் கொடுத்து ரூ. 60,000/- கடன் வாங்கியதாகவும், அவரது குடும்பத்திற்கு ஏற்பட்ட மருத்துவ செலவின் காரணமாக கணேசுக்கு பணத்தை திருப்பி தரமுடியதாலும், கடந்த 09.04.2023 ம் தேதி காலை 10.00 மணியளவில் 2 வது எதிரி கணேசனிடம் சுரேஷ்பாபு வாங்கிஇருந்த பணம் ரூ. 60,000/- த்தை வட்டியுடன் தருவதாக கூறியதாலும், அதற்கு கணேஷ் அசல் பத்திரம் அறிவழகன் அவர்களிடம் உள்ளது என்று சொன்னதாலும், தஞ்சாவூர் கீழ ராஜவீதிலுள்ள கணேசன் ஓம் சக்தி பிரிண்டர்ஸ்க்கு வர சொன்னதாகவும், அசா1 அங்கு சென்றதாகவும், அசா1 கணேசன் மற்றும் அறிவழகனிடம் கேட்டபோது ரூ. 60,000/- த்திற்கு நாள் ஒன்றுக்கு 6000/- வட்டி என மீட்டர் வட்டி போட்டு ரூ. 9,40,000/- அத்துடன் அசல் தொகையான ரூ. 60,000/- ஆக மொத்தம் ரூ. 10 லட்சம் கேட்டதாகவும், 10 லட்சத்தை கொடுத்து அசல் பத்திரத்தை பெற்று கொள்ளுமாறும்

சொன்னதாகவும், அ்போது எதிரிகள் அசா1 யை அசிங்கமாக திட்டியதாகவும், அசா1 அநியாய வட்டியாக இருக்கிறது என்று கேட்டபோது, மீண்டும் அசா1 யை திட்டியதாகவும் அப்போது நானும் எனக்கு தெரிந்த நண்பருமான சுரேஷ்குமார் என்பவரும் அசா1 உடன் இருந்ததாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம்-S.T. கனிமொழி.,

**நீதித்துறை நடுவர் எண்–I,**

தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No.178/2024**
**U/s. 294(b),506(1) IPC, 4TNPCEI Act**
**PROSECUTION WITNESS NO. 6 (LW.8 )**

| | |
|---|---|
| **Name** : பரமகுரு | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

**1** வது எதிரி ஆஜர்**. 2** வது எதிரி ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No.178/2024 02.07.2026 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.20 Pm**

**முதல் விசாரணை:**

நான் தஞ்சாவூர் கீழ வெள்ளளார் தெருவில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் மார்க்கெட்டிங் வேலை செய்து வருகிறேன். இரண்டு வருடங்களுக்கு சம்பவம் நடந்தது. எதிரிகளை தெரியாது. அசா1 சுரேஷ்பாபு எனது வீட்டிற்கு அருகில் குடியிருக்கிறார். கீழராஜவீதியில் ஏதோ பிரச்சனை என்று அசா1 ன் மைத்துனர் ரவிச்சந்திரன் என்னை அழைதது சென்றார். எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது. போலீசார் இருவரை கைது செய்து வைத்திருந்தார்கள். என்னுடன் ரவிச்சந்திரன் என்பவரும் கையெழுத்து செய்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கையெழுத்து அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மேற்கு காவல் நிலைய திருமதி. சுகிதா அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 18.04.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு தஞ்சாவூர் மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் இவ்வழக்கின் எதிரியான கணேஷ் என்பவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ரவிச்சந்திரன் மற்றும் என் முன்னிலையில் பதிவு செய்தததில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்த தேதி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அசா1 ன் மைத்துனர் ரவிச்சந்திரன் என்னை அழைத்தன்பேரில் தான் அங்கு நான்

சென்றேன் என்றால் சரிதான். யார் யாரிடம் பணம் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கு விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது.

**<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதை நான் படித்து பார்க்கவில்லை. போலீசாரும் படித்து காட்டவில்லை. நான் கையெழுத்து செய்த தாளில் நான் மற்றும் ரவிச்சந்திரன் வேறு யார் கையெழுத்து செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அதை யார் எழுதினார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம்-S.T. கனிமொழி.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.